**கவனிக்க.-** *2024.06.28 ஆந் திகதிய 2391 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2392 - 2024 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2024.07.05

*2392 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 666 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மாகாண விவசாயத் திணைக்களம் - ஊவா மாகாணம்

வெளிக்கள உதவியாளர் (விவசாயம்) பயிற்சி பாடநெறி

தேசிய தொழில் தகுதி நிலை 4 (NVQ 4) - 2024-II

01. மேற்படி பயிற்சி நெறிக்கு தகுதியான மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஊவா மாகாண விவசாய திணைக்களத்தின் கீழ் உள்ள பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இந்தப் பயிற்சி நெறி நடாத்தப்பட்டுள்ளது.

02. இந்த பயிற்சி நெறியானது சிங்கள மொழிமூலத்தில் நடாத்தப்படும் ஒரு வருட முழுநேர பயிற்சி நெறியாகும், இது ஊவா மாகாணத்தில் 06 மாத கோட்பாட்டு பயிற்சி மற்றும் 06 மாத கைத்தொழில் மயமாக்கப்பட்ட நடைமுறை பயிற்சிகளை உள்ளடக்கியது. இந்தப் பாடநெறியை வெற்றிகரமாக முடிக்கும் பயிற்சியாளர்களுக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் சான்றிதழ் மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் NVQ LEVEL 4 சான்றிதழ் வழங்கப்படும்.

03. விவசாயத்தை ஒரு தொழிலாக அல்லது சுயதொழிலாக முன்னெடுக்க விரும்புபவர்ளை இலக்காகக் கொண்டு இப்பாட நெறி நடாத்தப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பாடநெறியை உரிய முறையில் நிறைவு செய்கின்ற மாணவர்கள் NVQ LEVEL 5 நிலை வரை முன்நோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெறலாம்.

வெளிக்கள உதவியாளர் (விவசாயம்) பயிற்சி பாடத்திட்டத்தின் தேசிய தொழில் தகுதி (NVQ 4) பாடத்திட்டம் பின்வருமாறு :

M-01. வெளிக்கள நடவடிக்கைகளின் அமைப்பு
(Organizing field activities)

M-02. நிலம் தயாரித்தல் மற்றும் மண் பாதுகாப்பு
(Land preparation and soil conservation)

M-03. தாவர நாற்றங்கால் நிறுவுதல் மற்றும் பராமரிப்பு
(Establishing and maintaining plant nurseries)

M-04. வெளிக்கள பயிர்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்
(Establishing and maintaining crops in the field)

M-05. அறுவடை செய்தல் தொடர்பான உத்தரவாதம்/அறுவடை செயலாக்கம்
(Ensure proper harvesting /processing of the yield)

M-06. பண்ணை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பராமரித்தல்
(Maintain farm machinery and Equipment)

M-07. விவசாய விரிவாக்க திட்டங்களை கள அளவில் செயல்படுத்துதல்
(Perform extension activities)

M-08. பணியிட தொடர்பு
(Carryout work place communication)

M- 09. தொழில்முறை கல்வியறிவு மற்றும் எண்ணிக்கையைப் பயன்படுத்துதல்
(Apply occupational literacy and numeracy)

M-10. குழுக்களாக வேலை
(Work in teams)

M-11. தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு இணங்குதல்
(Practice occupational health and safety procedures in workplace)

04. 2024 இன் பயிற்சி வகுப்பு (இரண்டாம் தொகுதி 2024 II) யூலை 2024 இல் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 8" x 12" (A4) அளவிலான தாளின் இருபுறமும் அச்சிடப்பட்ட இணைக்கப்பட்ட படிவத்தின்படி விண்ணப்பப்படிவத்தை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 22.07.2024 க்கு முன்னதாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் போது கடித உறையின் மேல் இடது மூலையில் "NVQ நிலை 4 பாடநெறிக்கான விண்ணப்பங்கள் - 2024 குழு II" எனக் குறிக்கப்பட வேண்டும். எந்த ஒரு முழுமையற்ற அல்லது ஒழுங்கற்ற விண்ணப்பமும் அறிவிப்பு இல்லாமல் நிராகரிக்கப்படும்.

05. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி – ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளர், ஊவா மாகாண விவசாயத் திணைக்களம், ரத்வத்த மாவத்தை, பதுளை.

06. பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, போட்டிப் பரீட்சை அல்லது நேர்முகத் தேர்வு நடாத்தி ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளரினால் ஆட்சேர்ப்பு தீர்மானிக்கப்படும். தகுதியான விண்ணப்பதாரர்களில், பாடத்திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை விட இருமடங்காக தகுதித் தேர்வுக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, மிகவும் தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையின் போது தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சம்பந்தப்பட்ட போட்டிப் பரீட்சை/நேர்முகப்பரீட்சைக்கு திகதிகள் விண்ணப்பதாரர்களுக்கு எழுத்து மின்னஞ்சல் /WhatsApp மூலம் அறிவிக்கப்படும், மேலும் அவர்கள் ஊவா மாகாண சபையின் இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

07. சம்பந்தப்பட்ட பாடநெறி தொடர்பான மேலதிக விவரங்களுக்கு பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி மையத்தின் பண்ணை முகாமையாளரின் தொலைபேசி எண் 055 2265423 – இல் தொடர்பு கொள்ளலாம்.

08. பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

08.1 கல்விக் தகைமைகள் – க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு முறைக்கு மிகையாகாது 06 பாடங்களில் சித்தியடைந்து, 02 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விவசாயப் பாடம் கற்றுள்ளமையானது விசேட தகைமையாக கருதப்படும்.

08.2 ஏனைய தகைமைகள்

I. விண்ணப்பித்த திகதியின்படி அனைத்து விண்ணப்பதாரர்களும் 18 – 40 வயதுக்கு உட்பட வேண்டும்.

II. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் கடைசித் திகதியில் ஊவா மாகாணத்தில் குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருக்க வேண்டும் மற்றும் நிரந்தர வதிவிடத்திற்கான கிராம அதிகாரியின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

09. பயிற்சி பாடநெறிக்கான ஊக்குவிப்புத்தொகை

I. பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி மையத்தில் பயிற்சியின் முதல் 6 மாத காலப் பயிற்சியில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் உதவித் தொகையாக ஐந்நூறு ரூபாய் (ரூ. 500) வழங்கப்படும். ஊவா மாகாண விவசாய திணைக்களத்தின் 6 மாத கைத்தொழில் பயிற்சிக்காக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

10. ஏனைய விடயங்கள் –

I. இப் பாடநெறிக்காக 20 நபர்கள் நியமிக்கப்படுவார்கள்.

II. ஊவா மாகாண விவசாயத் திணைக்களம் பயிற்சியின் பின்னர் வேலைவாய்ப்பை வழங்குவதற்குக் இணங்கவில்லை.

III. ஏதேனும் ஒழுக்கத்திற்கு பாதகம் ஏற்படக்கூடிய நடவடிக்கையில் ஈடுபட்டதாகவோ அல்லது அதுபோன்ற நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கியதாகவோ நிரூபிக்கப்பட்டால், மாணவர் தன்மையை இரத்து செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள்.

IV. பயிற்சிக் காலத்தில் ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தினால் தங்குமிட வசதிகள், அல்லது உணவு பானங்கள் வழங்கப்பட மாட்டாது.

11. நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் –

I. வசிப்பிடத்தை நிரூபிப்பதற்காக கிராம அலுவலர் சான்றிதழ்,

II. இரண்டு நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அதில் ஒன்றினை அரசாங்க உயரதிகாரி ஒருவரிடமிருந்து பெற வேண்டும்.

III. நேர்முகப்பரீட்சையின் போது கல்வி மற்றும் இதர சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை தேசிய ஆளடையாள அட்டையுடன் சமர்ப்பிக்க வேண்டும். இச் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்

IV. விண்ணப்பதாரர்கள், தாங்கள் நடைமுறை விவசாயத்திற்கு ஏற்ற உடல் மற்றும் மன நிலையில் உள்ளதை, பாடநெறிக்கு பதிவு செய்யும் திகதியில் அரசாங்க மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழின் மூலம் நிரூபிக்க வேண்டும்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்யும் போது பின்வரும் உத்தரவாதங்களை சமர்ப்பிக்க வேண்டும் -

(I) ஒரு அரசாங்க உயரதிகாரியாக இருந்தால் ஒரு உத்தரவாதம் (பிணை ஒன்று) அல்லது ஒரு அதிகாரியை விட குறைந்த பதவியில் உள்ள அரசு அதிகாரிகளுக்கு இரண்டு உத்தரவாதம் (இரண்டு பிணை) வைத்தல் வேண்டும்.

(II) பயிற்சியின் முடிவில் திருப்பியளிக்கப்படும் ரூபா 1000.00 பிணை வைப்புத்தொகையானது பயிற்சிக்கு பதிவு செய்யும் நாளில் ஊவா மாகாண விவசாய திணைக்களத்தின் கணக்கில் பயிலுனர்களால் வைப்பிலிடப்பட வேண்டும். பாடநெறியை முடிக்கவில்லை என்றால், தொகை திரும்பப் பெறப்படமாட்டாது.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளர் அவர்களின் தீர்மானம் இறுதியானதாகும்.

ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளர்,
ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்,
பதுளை மாவத்தை,
ரத்வத்த.

07 - 311

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

*அட்டவணை - 2024*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.06.2024 |
| | | வெள்ளி | 12.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2024 |
| | | வெள்ளி | 19.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2024 |
| | | வெள்ளி | 26.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2024 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2024 |
| | | வெள்ளி | 09.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2024 |
| | | வெள்ளி | 16.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2024 |
| | | வெள்ளி | 23.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2024 |
| | | வெள்ளி | 30.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2024 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2024 |
| | | வெள்ளி | 13.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2024 |
| | | வெள்ளி | 20.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2024 |
| | | வெள்ளி | 27.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2024 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.